Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

மலர் 2 26-3-1985 செவ்வாய்க்கிழமை (பங்குனி 13 றஜப்-3) முழக்கம் 50

## வடபகுதி மக்கள் அப்பாவிகள்!
### பிரதமர் பிரேமதாஸ பேச்சு

வடபகுதி மக்கள் அப்பாவிகள். அவர்கள் தீவிரவாதத்தை எதிர்க்கிறார்கள். அவர்களில் சிலர் தீவிரவாதிகளினாலேயே கொல்லப்படுகின்றனர். இவ்வாறு ஹினிதுமவில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசிய பிரதமர் பிரேமதாசா தெரிவித்தார். தொடர்ந்து பேசிய பிரதமர், சர்வகட்சி மாநாடு மூலம் இனப்பிரச்சினையை தீர்க்க முயற்சிகள் நடைபெறுகின்றன. அதை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் பகிஷ்கரித்தனர் இன்று வேலை நிறுத்தங்களை ஏற்படுத்தி அரசாங்கத்தை சீர்குலைக்க சில எதிர்க்கட்சியினர் முயலுகின்றனர். இவ்வாறாக இனப்பிரச்சினை தீர்க்கப்படவேண்டிய இந்நேரத்தில் இவர்கள் குறுகிய அரசியல் நடவடிக்கையில் ஈடுபடுகிறார்கள் என்றும் தெரிவித்தார்.

★ 'வானொலி'யில் பிரபாகரன் பேச்சு:

# நாம் பயங்கரவாதிகளல்லர்; எங்கள் மீது திணித்த வன்முறையால் பலாத்காரத்தில் இறங்கினோம்!

"நாம் பயங்கரவாதிகளுமல்ல; பலாத்காரத்தில் பற்றுடையவர்களுமல்ல. எம்மீது திணிக்கப்பட்டுள்ள பலாத்காரத்தில் இருந்து விடுபடவே நாம் பலாத்காரப் பாதையில் இறங்கினோம். வன்முறையை இன்முறையால் வெல்ல முடியாது என்பதை உணர்ந்து கொண்டதனால்தான் நாம் வன்முறைப்போராட்டத்தைத் தழுவிக் கொண்டோம்" என்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் திரு வே. பிரபாகரன் தமது வானொலி மூலம் நேற்று உரையாற்றுகையில் தெரிவித்தார்.

சுமார் முப்பது நிமிடங்கள் அவர் நிகழ்த்திய இவ் உரையில் மேலும் தெரிவித்ததாவது:

இளைஞர்கள் இரத்தம் சிந்தியபோது, உயிர்த் தியாகம் செய்தபோது, கூட்டணியினர் எதனையும் உருப்படியாகச் செய்யவில்லை.

இன்று எமக்கு இந்தியாவின் நல்லெண்ணம், நட்புறவு, உதவி அவசியம். எனவே எமது தனி நாட்டுக் கோரிக்கைக்கு இந்தியாவின் ஆதரவை நாம் பெற்றுக் கொள்வது அவசியம் எமது கோரிக்கைகளைத் திட்டவட்டமாக எடுத்

—4 ஆம் பக்கம் பார்க்க

# இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண உதவி வழங்க இந்தியா தயார்!

## அமைச்சர் ஹமீதிடம் ரமேஷ் பண்டாரி உறுதி
## தமிழர் பிரதிநிதிகளாகப் பேசுவது யார்?

(எமது விசேஷ நிருபர்)

நாட்டின் சட்டம் ஒழுங்குக்கு முரண்பாடில்லாத வகையில் இலங்கையின் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்காக, சகல அரசியல் கட்சிகளும் இணைந்து தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்த வேண்டியதன் அவசியம் பற்றி இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் திரு. ரமேஷ் பண்டாரியும், இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜனாப். ஏ. ஸி. எஸ். ஹமீத்தும் நேற்றைய தங்கள் எழுபது நிமிடச் சந்திப்பில் ஆராய்ந்தனர். இது விடயத்தில் இந்தியா எந்த உதவியையும் வழங்கத் தயாராகவிருப்பதாகவும் திரு பண்டாரி இங்கு உறுதியளித்தார்.

"இனப் பிரச்சினை தொடர்பாக இலங்கை அரசாங்கத்துடன் இனிமேல் பேச்சுவார்த்தைக்கு இடமில்லை என்று தமிழர் விடுதலைக் கூட்டணி வெட்டொன்று துண்டு இரண்டாக தெரிவித்து வருவதால், தொடர்ந்து பேச்சுவார்த்தை நடக்குமானால் தமிழர் பிரதிநிதிகளாக யாரை அழைக்கலாம்?" என்ற கேள்வி இலங்கை தரப்பினால் நேற்றைய சந்திப்பில் எழுப்பப்பட்டதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

—4ம் பக்கம் பார்க்க

கலைஞர், ம. பொ. சி. பழனியாண்டி, வீரப்பன்

ஆஸ்பத்திரி சென்று பார்வையிட்டனர்

## அமிர் உடல் நிலையில் சிறிது முன்னேற்றம்

(சென்னை)

சென்னை தேவகி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம், நேற்று சுய நினைவுள்ளவராகவும், முன்னரிலும் பார்க்க உடல் நிலையில் சிறிது முன்னேற்றம் காணப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது

வைத்திய கலாநிதி இரத்தினசபாபதி தலைமையிலான நிபுணர்கள் குழுவொன்று இவருக்குச் சிகிச்சையளித்து அவதானித்து வருகின்றது. இரத்த அழுத்தம் சிறிது குறைந்துள்ள

—4-ஆம் பக்கம் பார்க்க

ஜனாதிபதியின் அறிவிப்பு:

## ஆயுதங்களைக் கைவிட்டால் தீவிரவாதிகளுக்கு மன்னிப்பு

ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு பேச்சுவார்த்தைக்கு தயாராகும் சகல தீவிரவாதிகளுக்கும் அரசாங்கம் மன்னிப்பு வழங்கும் என ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன நேற்று இங்கினிமிட்டியவில நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையில் வேண்டுகோள் விடுத்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் தீவிரவாதிகளுக்கும் தனக்கும் பகைமை இல்லை என்றும், பகைமையை பகைமையால் வெல்ல முடியாது பகைமையை தார்மீகத்தாலே வெல்லலாம் என்றார்.

—4 ஆம் பக்கம் பார்க்க

தீவிரவாதிகளுக்கு லலித் பகிரங்க அழைப்பு

# நேருக்கு நேர் வருக!

தமிழ் தீவிரவாதிகள் மௌனம் சாதிப்பது அவர்கள் பெரும் தாக்குதலொன்றை நடத்துவதற்குத் திட்டமிடுவதை உணர்த்துகின்றது. மறைந்திருந்து போராடுவதை விட்டு, நேருக்குநேர் அவர்கள் வரவேண்டும் என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார்.

ஆயுதப்படைகள் தீவிரவாதி

—4 ஆம் பக்கம் பார்க்க

## யாழ். நகரில் மூவருக்கு மரணதண்டனை; பதினாறு கொள்ளைகள் நடத்தினார்களாம்!

யாழ். நகரில் நேற்று முன்தினம் இரவு ஒரே நேரத்தில் சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மூன்று பேருக்கு தமிழ் ஈழ இராணுவம் மரணதண்டனை வழங்கியது. இவர்களின் சடலங்கள் மின்சாரக் கம்பங்களில் கட்டப்பட்ட நிலையில் நேற்றுக் காலை காணப்பட்டன.

மண்டைதீவைச் சேர்ந்த ப. கமலக்கண்ணன், சோ. கனகராசா, காரைநகரைச் சேர்ந்த இ. நடராசா ஆகியோரே மரணதண்டனை பெற்ற மூவருமாவர்.

"தமிழீழ மக்களே! தமிழீழ விடுதலைப் போராளிகள் என்றும் உறங்குவதில்லை" என்ற தலைப்பில் சடலங்களருகே ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகளில் யாழ் நகரில் சமீப காலமாக இடம்பெற்ற பதினாறு கடையுடைப்புத் திருட்டுச் சம்பவங்களில் இம் மூவரும் ஈடு

— 4-ஆம் பக்கம் பார்க்க

யாழ். வர்த்தக சங்கத்தின் அறிக்கை :

## தமிழினத்தின் பண்பாடு அழிந்துவிடவில்லை வர்த்தகர்களை விடுதலை செய்தமைக்கு நன்றி

கடத்தப்பட்ட மூன்று வர்த்தகர்களையும் நிபந்தனை எதுவுமின்றி விடுதலை செய்தமைக்கு நன்றி தெரிவித்துள்ள யாழ். மாநகர வர்த்தகர்கள் சங்கம், மனிதாபிமான அடிப்படையில் அவர்களை விடுதலை செய்தது, தமிழினத்தின் பண்பாடு, ஈவு, இரக்க சிந்தனையெல்லாம் அழிந்து விடவில்லை என்பதை நிரூபிக்கின்றது என்று தெரிவித்துள்ளது.

சங்கத் தலைவர் திரு. எஸ். வி. முருகேசு, செயலாளர் திரு. சி நமசிவாயம், பொருளாளர் க. இராசதுரை ஆகியோரால் விடுக்கப்பட்டுள்ள இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் நிகழாமல் வர்த்தகர்கள் அச்சமின்றி தங்கள் கடமைகளைச் செய்ய சம்பந்தப்பட்டவர்கள் ஆவன செய்ய வேண்டும். வர்த்தகர்களின் சேவை மக்களுக்கு அத்தியாவசியமானது. வர்த்தகர்கள் பொறுப்போடு செயலாற்ற வேண்டும் பொறுப்பிலுள்ளவர்கள் மிகவும் நல்ல முறையில் சிந்தித்துச் செயல்படுவதே இன்றைய அவசர தேவை.

சங்கம் வர்த்தகர்களினதும் பொது மக்களினதும் அபிலாஷைகளை நிறைவேற்ற தன்னு

—4 ஆம் பக்கம் பார்க்க

## திருநெல்வேலியில் உண்ணாவிரதம்

ஒரே இயக்கத்தைச் சேர்ந்த சில இளைஞர்கள், அதே இயக்கத்தைச் சேர்ந்த வேறு சில இளைஞர்களால் தாக்கப்பட்டுக் கடத்திச் செல்லப்பட்ட சம்பவமொன்று நேற்று முன்தினமிரவு திருநெல்வேலியில் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

—4-ஆம் பக்கம் பார்க்க

# அபிவிருத்திப் பணியில்பெண்கள் பங்களிப்பு இன்றைய காலகட்டத்தில் மிக அவசியம்

(சாவகச்சேரி)

''மகளிர் பணியகத்தின் திட்டங்களினுல் தென்மராட்சிப் பகுதி வாழ் மகளிர் மத்தியில் மிகுந்த விழிப்புணர்வும், மகளிர் சுதந்திரத்தையும், தமது பொருளாதார சுதந்திரத்தையும், தாமே பராமரிக்க வேண்டும் என்ற சுய துணிவும், தலைமைத்துவமும் பரவலாகத் தலை தூக்கியுள்ளதைக் காணக் கூடியதாக உள்ளது''

சர்வதேச மகளிர் ஆண்டு தினத்தை நினைவுபடுத்து முகமாக, இலங்கை மகளிர் பணியகத்தினுல், சாவகச்சேரியில் நடத்தப்பட்டபொதுக்கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திரு ஸ்ரீ சுவாமிநாதன் மேற்கண்டவாறு கூறினர்.

சாவகச்சேரி மகளிர் பணியக அபிவிருத்தி அலுவலர் திரு தயா குணரத்தினசிங்கம் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திரு ஸ்ரீ சுவாமிநாதன் தொடர்ந்து கூறியதாவது:- ''சனத்தொகை, எழுத்தறிவு, சேவை ஆகிய அடிப்படையில் ஆண்களுக்கு நிகராக, பல சமயங்களில் அதற்கு மேலாகவும் பங்கேற்றுப் பணி புரிகின்ற மகளிரை அபிவிருத்தியில் பங்கெடுக்கச் செய்வதின் மூலமே எந்த ஒரு நாடும் உருவாகும் செழிப்படையும். இது இன்று நிதர்சனமாகக் காணக் கூடிய உண்மை. இந்த நிலையில் இந்தப்பிரதேசத்தினது அபிவிருத்தியை உறுதிப்படுத்தும் ஆற்றல் இப்பகுதி மகளிரிடமே உள்ளது. இவர்களின் சுயதொழில் அறிவையும் ஆற்றலையும் வளர்ப்பதின் மூலமே அவர்களிடம் துணிவும், தலைமைத்துவமும் மேலும் விரிவடையும். ''என்று கூறிய திரு ஸ்ரீ சுவாமிநாதன் சாவகச்சேரியில் 125 இளம் பெண்களை, மகளிர் பணியக பயிற்சித் திட்டத்தின் கீழ் சுய தொழில் பயிற்சியளிக்கப்பட்டதும், இவர்களுக்குப் பயிற்சிக்காலத்தில் தினம் ஒன்றிற்கு பத்து ரூபாவும் சுய தொழிலுக்காக ரூபா 1,500 நன்கொடையும் இலங்கை மகளிர்பணியகத்தின் சார்பாக, யாழ் மகளிர் திட்டமிடல் பணிமனையினுல் வழங்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது என்றும் கூறினர்.

மேலும் பயிற்சி பெற்றவர்களானசெல்விகள் புஷ்பலதா, உருக்குமணி, பாலஜமுனு, வேணி ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

## தென்மராட்சியில் 642 மீனவர் குடும்பங்களுக்கு விசேஷ உணவு முத்திரை

(சாவகச்சேரி)

கடற்தொழில் பாதிக்கப்பட்ட தென்மராட்சிப் பகுதி கடற் தொழிலாளர்களுக்கு, தென்மராட்சிப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் மூவாயிரத்திற்கும் அதிகமான விசேட உணவு முத்திரைகளை வழங்கியுள்ளது.

கச்சாய், மறவன்புலவு, மட்டுவில், கெற்போலி, நாவற்குழி போன்ற பகுதிகளிலுள்ள கடற்றொழிலாளர்கள் இந்த விசேட உணவு முத்திரைகளைப் பெற்றுக் கொண்டுள்ளனர் மேலும் இக்கடற்றொழிலளர் குடும்பங்களுக்கு 'றெட்பாணு' தாபனமும் உணவுப் பொருட்களை இலவசமாக வழங்கியதோடு, சிறுகுழந்தைகள் உள்ள குடும்பங்களுக்கு குடும்பத்திற்கு ஒன்று வீதம் 'லக்டோஜன்' பாலமாப்பெட்டிகளும் வழங்கியுள்ளது

சுமார் 642 கடற்றொழிலாளர் குடும்பங்களுக்கு விசேட உணவு முத்திரைகளும், றெட்பாணு தாபனத்தின உணவுப் பொருள் அன்பளிப்பும் கிடைத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

## தையல் பயிற்சி

(சித்தன்கேணி)

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி தொழில் நுட்ப நிலையத்தில் முறைசாராக் கல்வித் திட்ட பாட நெறியாகிய தையற்கலைப் பயிற்சி நெறி ஒன்று கடந்த பதினேழாந் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளிலிருந்து விலகிய மாணவிகளுக்காக நடாத்தப்படும் இத் தையற்கலைப் பயிற்சி நெறியில் சேர்ந்து பயிற்சி பெறுவதற்கு சுமார் நூற்றுக்கு மேற்பட்ட மாணவிகள் விண்ணப்பித்திருந்தனர்.

வட்டுக்கோட்டை, அராலி, மூளாய், சங்கரத்தை, சித்தன்கேணி, சங்கானை, சுழிபுரம் முதலான பல பகுதிகளிலிருந்து விண்ணப்பித்த நூற்றுக்கு மேற்பட்ட மாணவிகளில் திறமை அடிப்படையில் நாற்பது (பேர்) மாணவிகள் தெரிவு செய்யப்பட்டு இப் பயிற்சியை மேற்கொண்டு வருகின்றனர்.


## வரி விளம்பரம்

### மாபெரும் ஏலவிற்பனை

தினசரி காலை 9 மணிமுதல் இம்மாதம் 31ம் திகதி ஞாயிற்று கிழமை வரையும் பலவித பொருட்கள் ஏராளமானவைகள் பகிரங்க ஏலத்தில் விற்பனையாகும். எப்பொருளாஞலும் வாங்கவும் விற்கவும் தனமும் வாருங்கள்: ஏல விற்பனை நிலையம், கோப்பாய்.

கலர் பிலிம் ... PROCESSING PRINTING செய்வதற்கு கொழும்பு ஸ்ருடியோ

குகன் ஸ்ருடியோ

இடமாற்றம்

பருத்தித்துறை குகன் ஸ்ருடியோ சிவன் கோவில் வடக்கு தெணி ரோட் 4 ஆம் வீட்டிலியங்குகிறது


## யாழ். தீயணைக்கும்படைநிதி ஏழு லட்சமாக அதிகரிப்பு

யாழ். மாநகராட்சி மன்றத்தின் தீயணைக்கும்படை நிதி ஏழுலட்சம் ரூபாவாக அதிகரித்துள்ளது.

நெதர்லாந்து நிறுவனம் ஒன்றின் செயலாளரான திரு. ஏ. எம். மூக் என்பவர் அனுப்பி வைத்த ஒரு லட்சத்து 43 ஆயிரம் ரூபா அன்பளிப்பு இதில் குறிப்பிடத்தக்கது.

அன்பளிப்பு வழங்கியோர் விபரம்:-

முன் தொடர்ச்சி 544 967 90 யாழ் வைத்தியசாலை கூட்டுறவு நலவிருத்திச் சங்கம் 2 000.00, திரு. ஏ எம் மூக், செயலாளர், ஏசியா டெல்க், அல்ஜிமீன் டயகோனுல் பீறு லெஸ்டின், நெதாலாந்து 1,43,600 00 எஸ். தயானந்தன். 1,000 00' திரு. வே. கிருஷ்ணராசா 250.00, திரு ஏ நாகேஸ்வரன் 250.00, இ ராமதாஸ் 250.00 எஸ் வாமதேவா 250.00, திரு. ஜி. ஏ. எல். நித்தியானந்தராசா 25.00. பேராசிரியர் வ. கருணைநாதன் 250 00, டாக்டர் திருமதி க. கணேஞத்துரை 250 00, திரு. ந ஸ்ரீதரன் 250.00, அதிபர் சம்பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம் ரிக்கற் மூலம் வசூல் 11,270 00, யாழ். பொதுசன நூல் நிலையம் டிக்கற் மூலம் வசூல் 450 00 மனோகரா ஆனந்தி மினி தியேட்டர் ரிக்கற் மூலம் வசூல் 1,065 50, வின்சர் தியேட்டர் ரிக்கற மூலம் வசூல் 1,768 00, றீகல் தியேட்டர் ரிக்கற் மூலம் வசூல் 1,765,00

மொத்தத் தொகை 709, 686. 40


யாழ். மக்களுக்கோர் அரிய சந்தர்ப்பம்

CROSS
TECHNICAL SERVICE

குறெஸ்ரெக்னிகல்சேர்விஸ்

Stage II, Model Market, No. 5, 1st Floor, Bus Stand Centre Road, Jaffna.

★ மேற்படி எமது ஸ்தாபனத்தில் புதுவருடத்தையொட்டி விசேட கழிவுடன் மின்சார உபகரணங்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

★ பாவனையாளர்களே உங்கள் பாவனைக்குகந்த மின்சார அடுப்புகள், சலவை இயந்திரம், குளிர்சாதனப் பெட்டி, ரெலிவிஷன், ரெலிவிஷன் ஸ்ராண்ட் (T. V. STAND) உட்பட சமயலறை உபகரணங்கள்

யாவற்றையும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளுங்கள்





✻ அளவெட்டி வடக்கு, கணேசராசா ஜெயசாந்தி தம்பதிகளின் மகன் கேசவன் இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறுர்.

✻ மட்டுவில் தெற்கு சுப்பிரமணியம் செல்வரத்தினம் தம்பதிகளின் மகன் சுபநேசர் இன்று தனது பிறந்த நாளைக் கொண்டாடுகிறுர்.

✻ உடுப்பிட்டி, இமையாணன் கிழக்கு, நடராசா-சரஸ்வதி தம்பதிகளின் மகள் ஜெயந்தி இன்று தனது எட்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறுர்,

✻ நல்லூர், இராணி வீதி, தனபாலசிங்கம் - மகேஸ்வரி தம்பதிகளின் மகள் வாசுகி இன்று தனது பத்தாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறுர்.

✻ மட்டுவில் தெற்கு, தம்பித்துரை-வள்ளி அம்மா தம்பதிகளின் மகன் விஜயதாஸ் இன்று தனது எட்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறுர்.

## பெற்றேர் ஆசிரியர் சந்திப்பு மாணவர் வளர்ச்சிக்குதவும்

(யாழ்ப்பாணம்)

''ஒரு பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் பெற்றோர்கள் வாரத்தில் ஒரு நாளாவது பாடசாலைக்குச் சென்று ஆசிரியர்களுடன் கலந்து பேசுவதன் மூலம், அப்பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியும், அப்பாடசாலையின் மற்றும் அபிவிருத்திகளும் வளம் பெற வழி வகுக்கும்'' என்று கோப்பாய் தெற்கு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் வித்தியாலய அபிவிருத்திச் சங்கக் கூட்டத்திற்கு தலைமை வகித்து உரையாற்றிய புதிய அதிபர் திரு. சி. கே. கே. கணபதிப்பிள்ளை குறிப்பிட்டார்.

வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில், புதிய அதிபர் மேலும் பேசுகையில்:- ஒவ்வோர் பிள்ளைகளின் கல்வித் தரத்தையும், அப்பிள்ளைகளின் நடைமுறைகளையும் ஆசிரியர்கள் மூலம், பெற்றோர்கள் அறிந்து கொள்வதன் மூலம் அப்பிள்ளைகளின் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு உதவியாக அமையும் என்றும் குறிப்பிட்டார்.

அபிவிருத்திச் சங்க முன்னுள் செயலாளரான, திரு எம். கே. இளையப்பு பேசும் போது:- நீண்ட காலமாக நிரப்பப்படாதிருந்த இப்பாடசாலையின், அதிபரினதும், மற்றும் உதவி ஆசிரியர்களினதும், வெற்றிடங்களை கல்வித்திணைக்களம், காலக் கிரமத்தில் நிரப்பி உதவியமைக்காக இப் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளது, கடமை உணர்வு மிக்க புதிய அதிபரின் நிர்வாகத்தின் கீழ் இப் பாடசாலை எதிர்காலத்தில் மேலும் பல அபிவிருத்திகளையும் பெற்றுக் கொள்ளக் கூடிய அரிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளதென்றும் குறிப்பிட்டார்.

திருமதி சின்னத்துரை திருவாளர்கள் ஜே. தம்பிஐயா, செயலாளர் திரு கே. பி. வரதகுலசிங்கம். ஆகியோரும், சிறப்புரையாற்றினுர்கள்.

## மாதருக்கான பல்கலைப்பயிற்சி

(நீர்வேலி)

நீர்வேலி வடக்கு மகளிர் குழுவினர் மாதர்கள் பல்கலைப் பயிற்சி வகுப்பு ஒன்றை ஆரப்பித்துள்ளனர். இதில் சுமார் 35 பெண்கள் பயிற்சி பெறுகின்றனர் இப்பயிற்சி வகுப்பில், முதலுதவி கேக் தயாரிப்பு. பூக்கள் செய்தல், தும்புத்தடி செய்தல், பாய்பெட்டிகள் இழைத்தல், தையல் வேலைகள், கோலம் இடுதல், மைக்கிறேம் பின்னல், சித்திர வேலைகள் என்பனவும் தொடர்ந்து ஒன்றன் பின் ஒன்ருகப் பயிற்றப்பட்டு வருவதாக மகளிர் குழுவின் தலைவி செல்வி ரி அருளம்பலம் தெரிவித்தார்.

## மனித உரிமைகள் இன்று முற்ருக நசுக்கப்படுகின்றன

(ஏழாலை)

உலகம் முழுவதும் விரும்பிப் பாதுகாக்க வேண்டிய மனித உரிமைகள் இன்று இலங்கையில் மிருகத்தனமாக நசுக்கப்படுகின்றன. மக்கள் சொல்லொணு பயங்கரங்களுக்கு இலக்காகின்றனர். இவற்றுக்கு சட்டவரம்புக்கமைந்து பரிகாரம் காணவே மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

இவ்வாறு சங்கானை கோவிற்பற்றுக்கான, மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசிய யாழ். மாவட்டத் தலைவர் திரு வை. இராசசுந்தரம் குறிப்பிட்டார்.

இக்கூட்டம் வழக்கம்பரை அம்மன் கோவில் மண்டபத்தில் நடைபெற்றது.

திரு. இராசசுந்தரம் மேலும் பேசுகையில் 'இவ்வியக்கம் போட்டி அடிப்படையிலோ, ஏனைய அமைப்புக்களின் பணிக்கு இடைஞ்சலாகவோ அமையாது மக்கள் உரிமைகளுக்காகப் போராடவே முன் வந்துள்ளது' என்ருர்.

கூட்டத்தில் சட்டத்தரணி எஸ். தேவராசா, திரு. வே. இராமநாதன், திரு. மு. நடராசா உட்பட மற்றும் பலரும் பேசினர்.


வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

ஈழமுரசு



**உதய சிந்தனை**

பலாத்காரத்தைப் போல் வேறெதுவும் ஒரு நாட்டின் அறநெறி வீரத்தை அழிவுறச் செய்வதில்லை.

-மகாத்மா காந்தி

41, கனடி வீதி யாழ்ப்பாணம் தொலைபேசி 23336

## இதய ஒலி

26-3-85 செவ்வாய்க்கிழமை (இரத்தாக்ஷி பங்குனி 13)

# நேருக்கு நேர் சந்திப்போமா?

தமிழ்ப்போராளிகள் தொடர்பான அரசாங்கத்தின் பிரதம பேச்சாளராக விளங்கிவருபவர் மாண்புமிகு தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலி.

தினசரி ஏதாவது ஒரு பொது நிகழ்ச்சியில் அவர் கலந்து வருகின்றார்.

ஆகக்குறைந்தது எங்காவது ஒரு மத நிகழ்ச்சியிலாவது அவர் கலந்துகொண்டு உரையாற்றுவார்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில், தமிழ்ப்போராளிகளின் நடவடிக்கைகள், திட்டங்கள் பற்றியே அவர் குறிப்பிட்டுப் பேசுவது இப்போது வழக்கமாகிவிட்டது.

தொடர்ச்சியாக, அமைச்சர் அத்துலத் முதலியின் பேச்சுக்களைச் செவிமடுத்து வந்தால் அவர் எங்கே நிற்கின்றார். எங்கே போய்க்கொண்டிருக்கின்றார் என்பது தெளிவாகப் புலனாகும்.

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வா, ராணுவத்தீர்வா என்ற மயக்கத்திலே மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் இவ்வேளையில், அமைச்சரின் சில பகிரங்க உரைகள் தமிழ் மக்களின் எதிர்காலம் பற்றிய அச்சத்தை உண்டுபண்ணுகின்றன.

''தீவிரவாதிகள் ஆயுதங்களைக் கீழே போடும் வரை, இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்படமாட்டாது'' என்று இரு தினங்களுக்கு முன்னர் அமைச்சர் பகிரங்கப்படுத்தினர்.

''தமிழ் தீவிரவாதிகள் பிரச்சினைக்கு தீர்வு காணப்படுவதை விரும்பவில்லை'' என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் தீவிரவாதிகளுடன் அரச மட்டத்தில் எப்போதாவது பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதா?

அரசியல் தீர்வு காணப்படுவதை அவர்கள் எதிர்த்தனரா?

ஆயுதங்களைக் கீழே வைக்க அவர்கள் மறுத்தனரா?

பொதுமக்கள் இந்தக் கேள்விகளுக்கான பதிலை அறிய விரும்புகின்றனர்.

தீவிரவாதிகளுக்கெதிரான ராணுவ நடவடிக்கைகளால் அப்பாவித தமிழ்மக்களே அநியாயமாகக் கொல்லப்படுவதால், அமைச்சர் அதுலத்முதலி தெரிவிக்கும் ''நிறுத்தப்படாத நடவடிக்கைகளினுல்'' இன்னும் எத்தனை உயிர்கள் பலியாக நேரிடும் என்ற அச்சமே தமிழ் மக்களைக் கவலைக்குள்ளாக்கியிருக்கின்றது.

இரு தினங்களுக்கு முன்னர் பண்ணையில் நடைபெற்ற சம்பவத்தில் போக்குவரத்துச் சபை பஸ்ஸில் பயணம் செய்தபோது சூடுபட்டு உயிரிழந்த இரு பெண்களும்கூட பயங்கரவாதிகள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இப்படியென்றால் 'நிறுத்தப்படாத நடவடிக்கைகளினுல்' இன்னும் எத்தனை புதுப் 'பயங்கரவாதிகளை' அரசு உருவாக்குமோ என்ற அச்சமும தமிழர்களை ஆட்கொண்டுள்ளது.

இதற்குப் பின்னர் அமைச்சர் நிகழ்த்திய மற்றொரு உரை, முன்னரிலும பார்க்க முக்கிய கவனத்தைப் பெற்றுள்ளது.

''தீவிரவாதிகளுடன் கடைசிவரை போராட்டம் நடத்துவோம்'' என்று பாணந்துறை வைபவமொன்றில் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். 'கடைசிவரை' என்றால், அது எதனைக் குறிக்கின்றது.

அரசியல் தீர்வு காணப்படும் வரையா? அல்லது இராணுவத் தீர்வு காணப்படும் வரையா? பின்னையதுதான் அமைச்சரின் 'கடைசிவரை'க்கான அர்த்தமாக இருக்குமானுல் சுடுகாட்டின் மண்டை ஓடுகளுக்கும், ஏலும்புக் கூடுகளுக்கும் மேல்தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படக்கூடும்.

''நேருக்கு நேர் போராடுவோம் வாருங்கள்'' எனவும் தமிழ்ப்போராளிகளுக்கு அமைச்சர் அழைப்பு விடுத்துள்ளார்.

அவர்களின் மௌனத்தின் அறிகுறி பெரும் தாக்குதலை நடத்த திட்டம் தீட்டுவதாகவும் அவர் சந்தேகம் தெரிவித்துள்ளார்.

வீணான சந்தேகம், பெரும் வினைகளையே உருவாக்குவது வழக்கம்.

''போர் என்றால் போர்; சமாதானம் என்றால் சமாதானம்'' என்று அன்றே சொன்னவர் அதி உத்தம ஜனதிபதி.

அவரது அரசியல் வாரிசு ''நேருக்கு நேர் சந்திப்போமா'' என்று இன்று அழைப்பு விடுக்கிறார்.

பேச்சுக்களைக் குறைத்து; பேச்சுவார்த்தைகளை நடத்துவதே இப்போதைய தேவை என்பதை மாண்புமிகு அமைச்சர் உணர வேண்டும்.

---

### பாகிஸ்தானின் புதிய பிரதம மந்திரி முக்கிய அறிவிப்பு

# ராணுவ - ஜனநாயக ஆட்சி ஏககாலத்தில் சாத்தியமில்லை

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் இராணுவ ஆட்சி நீக்கப்பட வேண்டியதன் தேவையைத்தான் ஜனதிபதி ஜெனரல் ஷியாவுல் ஹக்கிடம் வலியுறுத்தியுள்ளதாகப் புதிய பிரதம மந்திரியாகப் பதவியேற்றுள்ள திரு. யூனிஜோ கூறியுள்ளார். பாகிஸ்தானின் புதிய தேசிய சட்டசபையின் ஏகோபித்த ஆதரவினைப் பெற்றபின்னர் உரை நிகழ்த்துகையிலேயே பிரதமமந்திரி தனது நிலைப்பாட்டினை இவ்விதம் உறுதிபடத் தெரிவித்துள்ளார் 1973ம் ஆண்டின் அரசியல் சாசனம் திருத்தப்பட்ட பின்னர் அதிகாரங்களைப் பெருமளவில் கொண்டுள்ளதாக ஜனதிபதி ஷியாவுல்-ஹக் இருக்கும் வேளையில் பிரதம மந்திரியின் இவ்வறிவிப்பு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகக் கருதப்படுகிறது இராணுவ ஆட்சியும் பாராளுமன்ற ஜனநாயக முறை ஆட்சியும் ஏக காலத்தில் செயற்படுவது சாத்தியமில்லை என்பதனைத் தான் புரிந்து கொண்டுள்ளதாகவும பிரதம மந்திரி குறிப்பிட்டுள்ளார்.

இது இவ்வாறு இருக்க, பாராளுமன்ற ஆட்சி முறைக்கிசைந்தவகையில் இராணுவ ஆட்சியைத் தான் படிப்படியாக தேசிய சட்டசபையும், மாகாணசபையும் செயற்படத் தொடங்கியதும் நீக்கிவிடப் போவதாக ஜனதிபதி தெரிவித்துள்ளதும் நினைவில் கொள்ளத்தக்கது.

ஆக, பாகிஸ்தானில் எதிர்க்கட்சிகள் பெரும் கூட்டணிகள் அமைத்து ஆட்சிக்கு எதிராக வலுவான எதிர்நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கும் இக் காலகட்டத்தில் பாகிஸ்தான் ஜனதிபதியினதும் புதிய பிரதம மந்திரியினதும் செயற்பாடுகள் கூரிய கவனத்திற்கு உரியவை என அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர்.

## பீகாரில் கொலை

(பட்ன)

பீகாரில் மூண்ட அசம்பாவித சம்பவம் ஒன்றில் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் பலர் காயமுற்றதாகவும் நேற்று அறிவிக்கப்பட்டது.

## ரஷ்ய-ஸ்பெயின் உறவில் உறுதி

(லண்டன்)

சோவியத் யூனியனும், ஸ்பெயினும் தமக்கிடையேவிரிவான நட்புறவினை உருவாக்கிக் கொள்ளும் வகையிலான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

### மூன்று லட்சம் தொழிலாளரின்

## வேலைநிறுத்தம்: டென்மார்க் மாமூல் வாழ்க்கை பாதிப்பு

(லண்டன்)

டென்மார்க்கில் மூன்று இலட்சத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பரந்த அளவில் மேற்கொண்டுள்ள வேலை நிறுத்தத்தால் மாமூல் வாழ்க்கை இங்கு ஸ்தம்பிதமடைந்துள்ளது.

பல்வேறு கோரிக்கைகளின் பேரில் மேற்கொள்ளப்பட்டுள்ள இவ்வேலை நிறுத்தம் அரசுக்குப் பெரும் தலையிடியைக் கொடுத்துள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

இவ்வேலை நிறுத்தத்தால் போக்குவரத்துச் சேவைகள் உட்பட அன்றாட சேவைகள் சீர்குலைந்துள்ளதாகவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

## குஜராத்தில் குழப்பம் குறைகிறது

(புதுடில்லி)

குஜராத் மாநிலத்தில் அமைதிநிலை உருவாகி வருவதையடுத்து அங்கு சில இடங்களில் ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டு வருகிறது.

இங்கு தாழ்த்தப்பட்ட பிற்பட்ட சமூகத்தவருக்கான கல்வி, வேலை வாய்ப்பு ஒதுக்கீட்டுத் திட்டத்தை எதிர்த்து பெரும்கிளர்ச்சிகள் உருவானது தெரிந்ததே.

## வன்முறை தொடர்கிறது

(ஜொஹனஸ்பேக்)

தென்னுபிரிக்காவில் வன்முறைச் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன என்று நேற்று அறிவிக்கப்பட்டது.

### ஈராக் போர்முனை அறிவிப்பு

## ஈரானின் இரு எண்ணெய் கப்பல்கள் நிர்மூலமாகின

(லண்டன்)

வளைகுடாப் போரில் ஈராக்கும் ஈரானும் தாக்குதல் நிலைமை குறித்து போர் முனை அறிக்கைகளைத் தொடர்ந்தும் வெளியிட்டு வருகின்றன.

ஈரானின் இரு எண்ணெய்க் கப்பல்களைத் தான் தாக்கி நிர்மூலமாக்கிவிட்டதாக நேற்று ஈராக் அறிவித்தது.

### புதுடில்லியில் ஜனதிபதி ஒற்றுமை மாநாடு

## பஞ்சாப்பில் மீண்டும் கொந்தளிப்பு நிலை; இருவர் சுட்டுக்கொலை; ஒருவர் காயம்

(அமிர்தசரஸ்)

பஞ்சாப் மாநிலத்தில் சீக்கியத் தீவிரவாத குழுவின் வன்முறை நடவடிக்கைகளால் பெரும் கொந்தளிப்பு நிலை மீண்டும் உருவாகியுள்ளது.

சண்டிகட்டில் பி. ஜே. பி. தலைவர் ஒருவர் துப்பாக்கியால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் அவரது மகனும் சூட்டுக் காயங்களுக்குள்ளாகியுள்ளார். இந்திரா காங்கிரஸின் வெற்றிக்குப் பாடுபட்ட மாணவர் தலைவர் ஒருவரும் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். என்றும் அறிவிக்கப்படுகிறது மதலசிங் என்பவரே இம்மாணவர் தலைவராவர்.

இங்கு கடந்த ஆறு மாத கால இடைவெளிக்குப் பின் நிகழ்ந்த அரசியல் கொலைகள் இவை எனப் பொலிசார் தெரிவித்தனர்.

இது இவ்வாறு இருக்க பஞ்சாப்பில் கொந்தளிப்பு நிலை மீண்டும் மூண்டுள்ளதை அடுத்து புதுடில்லியில் ஜனதிபதி திரு. ஜெயில்சிங் தலைமையில் இந்து-சீக்கியர் ஒற்றுமை மாநாடு ஒன்று நடைபெற்றது. இம்மநாட்டில் சம்பந்தப்பட்ட விடயங்கள் மிக நுணுக்கமாகவும் விரிவாகவும் ஆராயப்பட்டன.

ஜனதிபதி இம்மாநாட்டில் பேசுகையில் வகுப்புவாதம், பிரிவினைச் சக்திகளை நாம் முழு சக்தியையும் பயன்படுத்தி முறியடிக்க வேண்டும். மத வரம்புக்குள் அரசியல் புகுத்தப்படுவது ஏற்புடையதல்ல. பொது மக்களும அதனை விரும்ப மாட்டார்கள் விரும்பவும் கூடாது. இந்நிலையிருந்தால் பிரச்சினை ஏழாது.

''சமூக சமயத் தலைவர்களைக் கொண்ட தேசிய அரங்கு இன்றைய சூழ்நிலையில் தேவை. இவ்விதக் குழப்பநிலை உருவாகையில் இது அதைத் தணிப்பதற்குப் பயன்படும்'' என்ற தன் யோசனையையும் ஜனதிபதி இம்மாநாட்டில் வெளியிட்டார்.

### பல்கேரிய குழு தமிழகத்தில் கருத்து

## கலாச்சாரப் பரிவர்த்தனை பரஸ்பர உறவு வளர்க்கும்

(சென்னை)

''நாடுகளுக்கு இடையிலான கலாச்சாரப பரிவர்த்தனைக்கு திரைப்படங்களும் உதவியாகலாம். நாடுகள் மத்தியில் நல்லுறவு வளர்ந்து வலுப்பெறவும் பயன்படும் வகையில் திரைப்படக் கலை சக்திபெற்றுள்ளது'' என்று பல்கேரிய நாட்டின் பிரதிநிதிகள் குழு சென்னையில் ஆரம்பமான ஒரு வாரகாலப் பல்கேரியத் திரைப்பட விழாவில் பேசுகையில் தெரிவித்தது.

இவ்விழாவில் தமிழக தகவல் செய்தித்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் தலைமையுரை நிகழ்த்துகையில் ''பாரத நாட்டின் பாரம்பரிய கலை, கலாச்சாரங்களை வெளிப்படுத்தும் வகையில் நமது திரைப்படங்கள் உருவாக வேண்டும். பல்கேரியா போன்ற சோஷலிஸ நாடுகளில் சக்திவாய்ந்த துறையாகத் திரைப்படக் கலை வளர்ச்சி பெற்றுள்ளது'' என்று கூறினார்.

26. 3. 1985 செவ்வாய்க்கிழமை

# ஈழமுரசு

## மூதூரில் இரு கொலைகள்; நேற்று கடுமையான சோதனை

(திருமலை)

மூதூரில் நடைபெற்ற இரண்டு கொலைச் சம்பவங்கள் பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது கட்டைபறிச்சான் கிராமத்தில் சிவபாக்கியம் என்ற முன்னாள் கிராம விதானையார் இனம் தெரியாதவர்களால் சுடப்பட்டு மரணமானார். சல்லிக்கிராமத்தில் தங்கராஜா தியாகராஜா என்ற 27 வயது வாலிபர் இளைஞர் கோஷ்டியொன்றின் துப்பாக்கிச் சூட்டுக்கு இரையானார் இச்சம்பவங்களைத் தொடர்ந்து இவ்விரு கிராமங்களும் நேற்று பல வாகனங்களில் சென்றவர்களால் சுற்றி வளைக்கப்பட்டு கடுமையான சோதனைக்குட்படுத்தப்பட்டது.

### "உண்மை நிலை விளங்கிய ராணுவ வீரர்கள்" அறிக்கை:

# 83 ஜூலை சம்பவம் இனி நடைபெறாது! பயங்கரவாதமே இன்றைய பிரச்சினை

'உண்மை நிலை விளங்கிய இலங்கை இராணுவ வீரர்கள்' என்ற பெயரில், 'யாழ்ப்பாணமும் பயங்கரவாதமும்' என்ற தலைப்பில் ரோனியோ பிரதி செய்யப்பட்ட பிரசுரமொன்று நேற்று யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் பரவலாக விநியோகிக்கப்பட்டது.

இப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விபரம் முழுமையாக இங்கு பிரசுரிக்கப்படுகின்றது:-

இன்று தமிழ் மக்களுக்கு உள்ள பல பிரச்சினைகளை ஆராய்ந்து பார்க்கும் போது பயங்கரவாத நடவடிக்கையே முதன்மையாக இருக்கிறது. இப்போது யாழ்ப்பாணத்தில் உண்டாகியுள்ள பிரச்சினைக்கு யார் காரணம்? பயங்கரவாதிகளே! அவர்கள் போராட்டம் உணவு நிலையங்களையும், போக்குவரத்துச் சாதனங்களையும் தாக்குவதாலேயே இப்பிரச்சினை உண்டாகியது.

பாடசாலைகளைப் பகிஷ்கரிப்பதும் பரீட்சைகளைக் குழப்பி இடையூறு செய்வதும், கடைகளைக் கொள்ளை அடிப்பதும், முதலாளிகளைப் பயமுறுத்திப் பணம் பெறுவதும், அவர்கள் பணம் தர மறுத்தால் சமூக விரோதி என்று சுட்டுக்கொல்வதும் போன்ற செய்கைகள் யாழ்ப்பாணத்தில் உள்ள உணவுப் பிரச்சினைகளையும், ஏனைய பிரச்சினைகளையும் மாற்றுமா?

தாம் பல பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்ட பின்னர் தாமே பொறுப்பு என உரிமை கோரி துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டு ஒட்டுபவர்கள் கடைகளையும் கோயில்களையும் கொள்ளையிட்ட பின்னர் அது பற்றி ஏன் துண்டுப் பிரசுரங்கள் ஒட்டுவதில்லை. இவர்கள் உண்மையானவர்களா?

மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதாகக் கூறும் இயக்கங்கள் எத்தனை பிரிவுகள் உள்ளன. கிட்டத்தட்ட 28 இயக்கங்கள் உள்ளன. தாமே தலைவர்கள் எனக் கூறிக்கொண்டு தாங்கள் பதவிகளுக்காக அடிபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படி அடிபடுபவர்கள் தமிழ் மக்களுக்காக அவர்களின் உரிமைகளுக்காகப் போராடுபவர்களா? இப்படியாகத் தங்களுக்குள் அடிபடுபவர்கள் முழு இலங்கையையும் சோசலிசமாக்கத் திட்டம் வைத்திருக்கிறார்களா? தமிழ் மக்களிடையே ஏற்பட்டிருக்கும் பல்வேறு சமூக கலாசார முரண்பாடுகளின்படி நோக்கும்போது சோசலிசம் நடைமுறைப்படுத்த முடியுமா? பேச்சளவில் உள்ள சோசலிசம் நடைமுறைக்குப் பயன்படுமா?

கடந்த 1983ம் ஆண்டு ஜூலை மாதம் நடைபெற்ற கலவரங்களைப் போன்று தமிழ் சிங்கள கலவரங்கள் இனி நடைபெற மாட்டாதெனத் தெரியப்படுத்துகின்றோம்.

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையம் தாக்குதலுக்குள்ளாகி 27 பொலிஸ் உத்தியோகத்தர்களும், புகைவண்டி தாக்கப்பட்டு 29 பேர் இராணுவத்தினர் கொல்லப்பட்ட போதும் கொழும்பில் எந்தவிதமான கலவரங்களும் நடைபெறவில்லையே!

உங்களுடைய போராட்டம் உண்மையானால் யாழ்ப்பாணத்தில் ஒரு ஒழுங்கான தலைவரைத் தெரிவு செய்து போராட்டம் நடத்துங்கள். இன்று யாழ்ப்பாணத்தில் ஒழுங்கான ஒரு தலைவர் இல்லாமையால் இப்பிரச்சினைக்கு முடிவு காணுதல் அரசாங்கத்துக்குக் கஷ்டமாக உள்ளது.

இப்பயங்கரவாதம் இப்படியே தொடருமாயின் யாழ்ப்பாண மக்களும் அடுத்தடுத்த சந்ததிகளுமே தொடர்ந்து பிரச்சினைகளுக்கு ஆளாக நேரிடும் என்பதை யாழ்ப்பாண மக்களுக்கு எச்சரிக்கிறோம்.

தற்போது யாழ்ப்பாணத்தை விடக் கொழும்பில் தமிழ் மக்கள் பாதுகாப்பாகவும் அமைதியாகவும் தங்களுக்குத்தேவையானபடி தொழில் நடத்தக் கூடியதாகவும் இருக்கிறது

யாழ் பொதுமக்களே! இது உங்களுடைய ஊர்; நீங்கள் சுதந்திரமாக நிம்மதியுடன் வாழ வேண்டுமாயின் யாழ்ப்பாணத்தில் உள்ள பயங்கரவாதிகளை ஒழிக்க எமக்கு உதவுங்கள்.

இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தவும் ஒரு முடிவு எடுப்பதற்கும் எப்பக்க சார்புமற்ற ஒரு நடுநிலைமையான தலைவரை அனுப்ப யாழ்ப்பாணத்து மக்கள் தயாராக உள்ளனரா? அல்லது தொடர்ந்து வரும் சந்ததியினரை பிரச்சினைகளுக்கு ஆளாக்கத் தயாராக உள்ளனரா? நாட்டில் தற்போது உள்ள நிலைமையானது இப்பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடியதாக ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டிய நிலைமையில் உள்ளது. இப்பிரச்சினையை நீடிக்க விடாது உங்கள் எதிர்கால சந்ததியினர் வாழ்வு வளம் பெறவாவது உடன் தீர்வு காண முற்படுங்கள்.

இலங்கை வாழ் தமிழ் மக்களே! தற்போது உங்களுக்கும் எமக்கும் உள்ள உறவு நெருங்குவது நல்ல எதிர்காலத்தின் அறிகுறியே.

### யாழ். மாவட்ட கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை:

# வடக்கு, கிழக்கு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவேண்டும்

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மக்கள், குறிப்பாக தொழிலாளர், விவசாயிகள், முற்போக்கு எண்ணம் கொண்ட மக்கள் எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் சகல பிரச்சினைகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்படவேண்டும். இதற்கான ஒரே மார்க்கம் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதே என்று இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ் மாவட்டக் குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் மேற்படி கிளையின் கூட்டம் மாவட்டச் செயலாளர் திரு. பொன். குமாரசாமி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தைத் தொடர்ந்து விடுக்கப்பட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாட்டின் ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையும் மனதில் கொண்டு பிரதேச சுயாட்சி அடிப்படையில் அரசியல் தீர்வுகாணப்பட்டு இம் மாகாணங்களில் சிவில் நிர்வாகம் அமைக்கப்பட வேண்டும். இதற்கான இயக்கத்தில் ஒவ்வொரு மக்கள் பிரிவினரும் தமது பங்களிப்பை செலுத்தவேண்டும். இதனை மையமாகவைத்து ஏனைய மக்கள் ஸ்தாபனங்களின் குறிப்பாக சிங்கள தொழிலாளி வர்க்கத்தின் ஆதரவைக் கோரவேண்டும் இப்பணியில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ். மாவட்டக் குழு தொடர்ந்தும் பாடுபடும்

முதலாளித்துவ சமூக அமைப்பை மாற்றி ஒரு சோசலிச சமூக அமைப்பு உருவாக்கப்படவேண்டும் நாம் இப்பொழுது இருக்கும் அமைப்பை மாற்றியமைக்காது சீர்திருத்தங்கள் மூலம் சோசலிசத்தை உருவாக்க முயற்சிப்பது நடைமுறைக்கு ஒவ்வாத செயல்பாடு என்பதை சுட்டிக்காட்டுவதுடன் வெகுஜனப் போராட்டங்களை ஆரம்பித்து மக்களின் பூர்ண ஆதரவுடன் செயல்பட்டு பிரச்சினைகளை தீர்க்க முயற்சிக்கவேண்டும்.

## சுடப்பட்டு மரணம்

நேற்று முன்தினம் மாலை நாலு மணியளவில் பொலிகண்டியில் பாதுகாப்பு பிரதேசத்தினுள் ஸ்கூட்டரில் சென்ற வேளை ஒருவர் சுடப்பட்டு மரணமானார். வல்வெட்டித்துறை மக்கள் வங்கி ஊழியரான ஐயர் எனப்படும் ஜெயச்சந்திரன் என்பவரே இவ்வாறு மரணமானவராவர்.

## நாம் பயங்கரவாதி..

— 1ஆம்-பக்கத் தொடர்

துக்கூறி இந்தியாவின் ஆதரவைப் பெறுவதை விட்டு எமது பிரச்சினையைத் தீர்த்து வைக்குமாறு இந்தியாவிடம் கை நீட்டி நிற்பது அரசியல் தீர்வாகாது.

கூட்டணியின் மிகப் பெரிய ராஜதந்திர நடவடிக்கை இதுவாகும் ஆரம்பத்திலேயே தமிழீழ தனிநாட்டுக் கோரிக்கையை இந்திய அரசுக்கு விளக்கி வைத்திருந்தால் எமது பிரச்சினை இவ்வளவு மோசமான கட்டத்தை அடைந்திராது.

தனித்து நின்று போராடி தமிழீழம் காணவேண்டுமென்ற ஒரு நோக்கோடு நாம் இயங்கவில்லை. ஆயுதப்போராட்டப் பாதையை வகுத்துக்கொண்ட சகல விடுதலை அமைப்புக்களும் எமது பொது எதிரிக்கு எதிர்கொண்டு போராட வேண்டுமென்பதே எமது ஆசை.

ஒன்றை மட்டும் நாம் தெட்டத் தெளிவாகக் கூறவிரும்புகிறோம். எந்தச் சூழ்நிலையிலும் போராட்டத்தை ஒத்திப்போடவோ அதிலிருந்து ஒதுங்கி விடவோ முடியாது எனத் தெரிவித்தார்.

## இனப்பிரச்சினைக்கு.

—1ம் பக்கத் தொடர்

இந்திய தரப்பில் திரு. ரமேஷ் பண்டாரி புதிய ஆலோசனைகள் எதனையும் தெரிவிக்கவில்லையென்றும், இலங்கையின் கருத்துக்களை அறிவதிலேயே அவர் கூடுதலாக அக்கறை காட்டியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த இரு வருடங்களாக நடைபெற்ற பேச்சுவார்த்தைகள், அவற்றில் காணப்பட்ட முன்னேற்றம், பின்னர் ஏற்பட்ட சீர்குலைவு, தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் பற்றி அமைச்சர் ஹமீத் நேற்றைய சந்திப்பில் விபரமாக விளக்கிக் கூறினார்.

இந்தியத் தூதுவர் எஸ். ஜே. எஸ். சத்வால், இலங்கைவெளிவிவகார அமைச்சின் செயலாளர் திரு. டபிள்யூ. ரி. ஜெயசிங்க ஆகியோரும் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர் திரு ரமேஷ்பண்டாரி ஜனாதிபதியையும், முக்கிய சில அமைச்சர்களையும் இன்று சந்திக்கவுள்ளார். நாளை புதன்கிழமை இவர் புதுடில்லி திரும்புவார்.

## தமிழினத்தின்,.

—1ம் பக்கத் தொடர்

லான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும். சிந்தனையோடு கூடிய செயல்பாட்டினைக் கொண்டு மக்கள் சேவையை வர்த்தகர்கள் மேற்கொள்ள சங்கம் ஆவன செய்யும். வர்த்தகர்கள் ஒற்றுமையுணர்வோடு சங்க வளர்ச்சிக்கு ஆதரவு கொடுத்து அதன் முக்கியத்துவமான செயல்பாட்டினை உணர்ந்து சங்கத்திற்கு பூரணமான நல்லாதரவு தர வேண்டும்.

பொது ஸ்தாபனங்கள், பத்திரிகைகள் குறிப்பாக ஈழமுரசு பத்திரிகை சங்கத்தின் செய்திகளை நல்ல முறையில் காலதாமதமில்லாமல் வெளியிட்டு ஆதரவளித்தமைக்கு எமது மனப்பூர்வமான நன்றியினையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கின்றோம். வர்த்தகர்களின் ஒற்றுமையுணர்வு சங்க வளர்ச்சிக்கு ஊக்கம் அளித்து நல்ல செயல்பாட்டினைச் சங்கம் உருவாக்க வழி கொடுக்கும் என நம்புகின்றோம்.

## ஆயுதங்களை..

—1ம் பக்கத் தொடர்

தீவிரவாதிகள் அப்பாவி தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களை கொலை செய்வதையும் ஜனாதிபதி கண்டித்து, இலங்கை சகல இனமக்களும் வாழும் ஒரு நாடு என்றார்.

இந்திய வெளியுறவு அமைச்சின் செயலாளர் திரு ரமேஷ் பண்டாரியின் இலங்கை விஜயத்தையும் அவர் அங்கு குறிப்பிட்டார். திரு ரமேஷ் பண்டாரியும் இவ்வைபவத்தில் கலந்து கொண்டார்.

## திருநெல்வேலி..

—1ம் பக்கத் தொடர்

கடந்த சில நாட்களாக இவர்களுக்கிடையே நிலவி வந்த கருத்து வேற்றுமையே இதற்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தைக் கண்டித்து, பொது மக்கள் சேர்ந்து இன்று திருநெல்வேலி அம்மன் கோவில் முன்றலில் உண்ணாவிரதம் நடத்தவிருப்பதாகவும் நேற்றிரவு தெரிவிக்கப்பட்டது.

## அமிர் உடல்.,.

தாகவும், தொடர்ந்தும் படுக்கையிலேயே அவர் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது,

கலைஞர் மு. கருணாநிதி, அமைச்சர் வீரப்பன், திரு. ம. பொ. சிவஞானம், நெடுமாறன், இந்திரா காங்கிரஸ் செயலாளர் திரு. பழனியாண்டி, வீரமணி ஆகியோரும், சில இளைஞர் இயக்க பிரதிநிதிகளும் ஆஸ்பத்திரி சென்று திரு அமிர்தலிங்கத்தைப் பார்வையிட்டனர்.

"உயிருக்கு ஆபத்தில்லை" என்றும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் குறிப்பிட்டுத் தெரிவித்தன

திரு அமிர்தலிங்கம் உடல் நலம் காணவேண்டி யாழ்ப்பாணத்தின் பல ஆலயங்களிலும் நேற்று பூஜை வழிபாடுகள் நடைபெற்றன. இன்று மாலை நல்லூர்வீரமாகாளி அம்மன் ஆலயத்தில் விசேஷ பூஜை நடைபெறவுள்ளதாக கூட்டணி நிர்வாகச் செயலர் திரு மு. ஆலாலசுந்தரம் தெரிவித்தார்.

## யாழ் நகரில்...

—1ம் பக்கத் தொடர்

பட்டதாகப் பிரசுரமொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஈழ தேச விடுதலை இயக்கங்களுக்கும் மக்களுக்கும் இடையே பிளவுகளை ஏற்படுத்தும் வகையில் யாழ் நகரில் பரவலாக கொள்ளைகளை நடத்திய மேற்படி மூவர் மீதும் தமது விசாரணையின் பின்னர் மக்கள் தீர்ப்புக்கிணங்க தமிழ் ஈழ இராணுவ புலனாய்வுப் பிரிவு மரணதண்டனை வழங்கியதாகவும் அவர்களின் பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

மூன்று சடலங்களும் நேற்று மாலை யாழ். ஆஸ்பத்திரிச் சவச்சாலையில் வண்ணார்பண்ணை கிராமசேவகரால் ஒப்படைக்கப்பட்டன. பிரேத பரிசோதனை இன்று நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மரணதண்டனை பெற்றவர்களின் சமூக விரோதச் செயல்களுக்கு சில வர்த்தகர்களின் ஆதரவுமிருந்ததாகவும் தமிழ் ஈழ ராணுவத்தின் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நேருக்கு நேர்...

—1ம் பக்கத் தொடர்

களுக்கு எதிராக கடைசிவரை போராட சபதம் பூண்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார் தமிழ்தீவிரவாதிகள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண விரும்பவில்லை மார்க்ஸிய ஆட்சியொன்றை இந்நாட்டில் ஏற்படுத்தவே அவர்கள் முயற்சிக்கின்றனர்" என்றும் தெரிவித்த அமைச்சர், அவர்களை நேருக்கு நேர் போராட வருமாறு தாம் அழைப்பு விடுப்பதாகவும் தெரிவித்தார். பாணந்துறையில் நடைபெற்ற வைபவமொன்றில் அமைச்சர் உரையாற்றினார்

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 26-03-1985 செவ்வாய்க்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.